2019 பிப்ரவரி 11]

மாணவியர் விடுதி, அரசு கல்லூரி வளாகம், கும்பகோணம்-II மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, கும்பகோணம் என மூன்று கல்லூரி மாணவியர் விடுதிகள் இயங்கிவரும் நிலையில், மேலும் ஒரு புதிய கல்லூரி மாணவியர் விடுதி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.* (குறுக்கீடுகள்)

[**குறிப்பு**: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தகவல் கோரல்

(அ) ஜாக்டோ-ஜியோ அமைப்பினர் நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கைவிடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மனோ தங்கராஜ், உட்காருங்கள்.* (குறுக்கீடு) *திரு. மதிவாணன், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.* (குறுக்கீடு) *ஒவ்வொருவராக வாய்ப்புத் தருகிறேன், இருங்கள்.* (குறுக்கீடுகள்) *அதற்கெல்லாம் ரொம்ப நன்றி, உட்காருங்கள். திரு. தங்கம் தென்னரசு, என்னவென்று சொல்லுங்கள்.* (குறுக்கீடு) *உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். திரு. தங்கம் தென்னரசு, பேசுங்கள்.* (குறுக்கீடு) *உட்காருங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிருவாகத்தினுடைய முதுகெலும்பாகத் திகழக்கூடியவர்கள் அரசு ஊழியர்கள். அதேபோல் வருங்கால சமுதாயத்தைக் கட்டிக்காத்து உருவாக்க வேண்டியவர்கள் ஆசிரியர் பெருமக்கள். அரசாங்கம் செயல்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களை இன்றைக்கு மக்களிடத்திலே எடுத்துக்கொண்டு செல்லக்கூடிய மிகப் பெரிய கடமையை அரசு ஊழியர்கள் நிறைவேற்றி வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அர ஊழியர்களும், ஆசிரியர்களும் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி, அவர்களுடைய ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் மூலமாக போராட்டத்தை நடத்திவருகிறார்கள். அரசு அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை பேச்சுவார்த்தை*

[திரு. தங்கம் தென்னரசு] [*2019 பிப்ரவரி 11*

மூலமாகத் தீர்க்காமல், இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கக்கூடிய பலர்மீது இன்றைக்கு பலவகைகளிலே நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடிய நீங்கள் தேர்தல் அறிக்கையிலேயே தெரிவித்திருந்தீர்கள்; இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் நிச்சயமாக உங்களை அழைத்துப் பேசி, பரிசீலித்து நிறைவேற்றித் தருவோம் என்று தெரிவித்திருந்தீர்கள். அதையொட்டி, திரு. டி.எஸ். ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் தலைமையிலேயும், திரு. சித்திக், இ.ஆ.ப. அவர்களுடைய தலைமையிலேயும் சில குழுக்களையும் நீங்கள் அமைத்திருந்தீர்கள். அந்தக் குழுக்கள் உங்களிடத்திலே அறிக்கைகளைத் தந்திருக்கின்றன. அந்த அறிக்கைகளின்மீது இதுவரை நீங்கள் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறோம். அதே வேளையில், ஆசிரியர் பெருமக்கள் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அவர்கள்மீது துறைரீதியாக பல நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொண்டிருக்கிறீர்கள். காவல் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. Suspend *செய்யப்பட்டிருக்கிறார்கள். பல இடங்களிலே இட மாறுதல் நடந்திருக்கிறது. நடவடிக்கைகளைத் தாண்டி, காவல் துறை மூலமாகக்கூட வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆக இந்த அரசாங்கத்தையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, உடனடியாக இந்த வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற்று, அவர்கள்மீது இருக்கக்கூடிய நடவடிக்கைகளையும் திரும்பப் பெற்று, ஒரு சுமுகமான நிலையை அரசு ஊழியர்களிடத்திலும், ஆசிரியர்களிடத்திலும் எடுப்பதற்கு நீங்கள் முன்வர வேண்டுமென்பதை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நாங்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்பதைத்தான் அவர்கள் முக்கியமாகக் கேட்கிறார்கள். இது எந்தவிதமான செலவுமே இல்லாத ஒரு கோரிக்கை; இது ஒரு முக்கியமான கோரிக்கை. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதிலே என்ன செலவு வரப்போகிறது? அரசாங்கத்திற்கு என்ன சுமை வரப்போகிறது? எனவே, அன்புகூர்ந்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களை உடனடியாக அழைத்துப் பேசி, இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கக்கூடிய ஆசிரியர் பெருமக்களாக*

2019 பிப்ரவரி 11] [*திரு. தங்கம் தென்னரசு*]

இருந்தாலும் அல்லது அரசு ஊழியர்களாக இருந்தாலும் அவர்கள்மீது எடுக்கப்பட்டிருக்கக்கூடிய எல்லாவிதமான நடவடிக்கைகளையும் அரசு திரும்பப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பேச்சுவார்த்தை மூலமாக நல்லதொரு இயல்பான, சுமுகமான சூழ்நிலையை அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உருவாக்கி, அரசு இயந்திரம் சுமுகமாக செயல்படக்கூடிய சூழ்நிலையை நீங்கள் உருவாக்கிட வேண்டுமென்று நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்தி, கவனத்தை ஈர்த்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) பேசுங்கள்.*

முற்பகல் 11-25

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள், குறிப்பாக ஆசிரியர்ப் பெருமக்கள் வீதியிலே இறங்கி நீண்ட நாட்கள் போராடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் ஒட்டுமொத்தமாக மாணவர் சமுதாயம் மிகவும் பாதிக்கப்பட்டது. எதற்காக அவர்கள் போராடினார்கள் என்றால்,* monthly P.F-*ஐ அரசு வசூலிக்கிறது.* Monthly pension *வேண்டுமென்று அவர்கள் அர்த்தமுள்ள போராட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். மாணவர்களே, ஆசிரியர்களுக்காக போராடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, தமிழகமெங்கும் மிகவும் ஒரு வேதனையான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிடுகிறேன். போராட்டத்திலே ஈடுபட்ட அரசு ஊழியர்களை, ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரில், அரசு தண்டிக்கப் போவதாகவும், நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் ஆசிரியப் பெருமக்களும், அரசு ஊழியர்களும் வேதனையிலே இருக்கிறார்கள். அதனைக் கைவிட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அரசு, குழுக்கள் அமைத்து, அரசு ஊழியர்களினுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் போவதாகச் சொல்கிறீர்கள். ஆனால், அந்தக் குழுக்கள்* report *கொடுத்த பிறகு, அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. அதனை அரசு ஊழியர்கள் எதிர்பார்க்கிறார்கள். மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு அவர்கள் மீண்டும் போராடக்கூடிய நிலைமையை இந்த அரசு உருவாக்கக் கூடாது. சுமுகமான நிலையை ஏற்படுத்த வேண்டும்.*

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2019 பிப்ரவரி 11

ஆசிரியப் பெருமக்கள் தங்களுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்வது, எதிர்காலத்திலே நம்முடைய தமிழகத்தை வளர்ச்சியின் பாதையிலே கொண்டு செல்வதற்கு மிகவும் முக்கியம். அதனை முக்கியப்படுத்தி, அதனை நினைத்து, நீங்கள் நிச்சயமாக அந்தப் போராட்டங்களை தடுத்து, அவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை கைவிடுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். பேச்சுவார்த்தைமூலம் சுமுகமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து, நான் அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு 11-10-2017 அன்று ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை உடனடியாக ஏற்றுக் கொண்டு, மாநிலத்தில் அனைத்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு புதிய ஊதியத்தை 1-10-2017 முதல் அமல்படுத்தியது. இதனையடுத்து, புதிய ஊதியத்திற்கான நிலுவைத் தொகையை வழங்க வேண்டும்; புதிய ஓய்வூதியத் திட்டத்தை இரத்து செய்ய வேண்டும்; ஊதிய முரண்பாடுகளைக் களைய வேண்டும் என்பன உள்ளிட்ட சில கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பினர் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். ஆண்டுதோறும் உயர்ந்துவரும் ஓய்வூதிய நிதிச் சுமையால், ஓய்வூதியம் தொடர்ந்து வழங்க இயலாத நிலை ஏற்படுவதுடன், அரசு ஊழியர்கள் சம்பளம் உள்ளிட்ட நிருவாகச் செலவை ஈடுகட்ட முடியாத நிலை ஏற்படும் என வல்லுநர்கள் கருத்து தெரிவித்த நிலையில், புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் பல மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டது. 2003 ஆம் ஆண்டிலேயே இதற்கான சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டு, மேற்கு வங்காளம் தவிர, மத்திய அரசு உட்பட இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் புதிய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அரசு சார்பில் 10 சதவிகிதமும், ஊழியர்கள் சார்பில் 10 சதவிகிதமும் பிடித்தம் செய்யப்பட்டு, ஓய்வூதியம் நிதியத்தில் இருப்பு வைக்கப்பட்டு வருகின்றது. 2003 ஆம் ஆண்டுக்குப் பின் அரசுப் பணியில் சேர்ந்த அனைவருக்குமே புதிய ஓய்வூதியத் திட்டத்தின்படிதான் தாங்கள் பணியமர்த்தப்பட்டுள்ளோம் என்ற விவரம் நன்றாகவே தெரியும். இருப்பினும், மதுரையில் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் 22-1-2019 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் செல்வது என

2019 பிப்ரவரி 11] [திரு. டி. ஜெயக்குமார்]

முடிவு செய்தனர். இதனையடுத்து, ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக, கூட்டமைப்பின் நிருவாகிகளுடன் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்கள், பல முறை பேச்சுவார்த்தை நடத்தி, அரசின் நிதிநிலை குறித்து எடுத்துக் கூறியும், போராட்டங்களைக் கைவிடக் கோரியும், அதற்கும் செவிமடுக்காமல் கூட்டமைப்பினர் தாங்கள் அறிவித்தபடி 22-1-2019 முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 22-1-2019 அன்று இக்கூட்டமைப்பைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மொத்தம் 7 இலட்சத்து 41 ஆயிரத்து 757 பேரில், 2 இலட்சத்து 10 ஆயிரத்து 500 பேர், அதாவது, 28 சதவிகிதம் பேர் மட்டுமே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் ஆசிரியர்களின் வேலை நிறுத்தத்தால் மாணவர்களுடைய கல்வி பாதிக்கப்படுவதால், வேலைநிறுத்தத்தைக் கைவிட உத்தரவிடக்கோரி கோகுல் என்ற மாணவர் தாக்கல் செய்த மனுவை 23-1-2019 அன்று விசாரித்த மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம், ஆசிரியர்களை உடனடியாக பணிக்குத் திரும்ப அறிவுறுத்தியது. இதனையடுத்து மாணவர் கோகுல், மாண்புமிகு உயர் நீதிமன்ற அறிவுரைப்படி, ஆசிரியர்கள் பணிக்குத் திரும்பாமல் வேலைநிறுத்தத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது குறித்து 25-1-2019 அன்று மீண்டும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையிட்டபோது, சென்னை உயர் நீதிமன்றம், மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஆசிரியர்கள் பணிக்குத் திரும்ப வேண்டும் என்பது தங்கள் கருத்தாகும் என்றும், பணிக்குத் திரும்பாத ஆசிரியர்களின்மீது நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு முடிவு செய்துகொள்ளலாம் என்றும் தெரிவித்தது. மாண்புமிகு உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியும், அக்கூட்டமைப்பினர் பணிக்குத் திரும்பாமல், தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். மேலும், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தவர்கள், மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம், சாலை மறியல் போன்ற போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்தனர்.

முற்பகல் 11-30

பொதுத் தேர்வுகள் நெருங்கும் நேரம் என்பதால், மாணவர்களுடைய கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவும், அரசு அலுவலகங்களில் பணிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவும், நிருவாகரீதியாக பல நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு வேறு வழியில்லாமல் மேற்கொண்டது. மேலும்,

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்களின் கோரிக்கைகளை அரசின் நிதிநிலை காரணமாக, ஏற்க இயலாத நிலை குறித்த விரிவான அறிக்கை ஒன்றினை 27-1-2019 அன்று பத்திரிகைச் செய்தி வாயிலாகத் தெரிவித்து, போராட்டத்தைக் கைவிட்டு பணிக்குத் திரும்புமாறு கேட்டுக்கொண்டேன். இருப்பினும், இக்கூட்டமைப்பினர் 22-1-2019 முதல் 29-1-2019 வரை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டபோது மாவட்டத் தலைநகரங்களில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். காவல் துறையினர் அவர்களைக் கலைந்து செல்லுமாறு கூறியும், அவர்கள் கலைந்து செல்லாமல் தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டு, இடையூறு ஏற்படுத்தியதால் காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து அப்புறப்படுத்தினர். மாநிலம் முழுவதும் வேலைநிறுத்தத்தின்போது இதுபோன்ற மறியல்களில் ஈடுபட்டதற்காக இக்கூட்டமைப்பினர்மீது 86 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 6,521 நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 1,656 நபர்கள் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். மேலும், 4,871 நபர்கள் நீதிமன்றங்கள் முன்பு ஆஜர்படுத்தப்பட்டபோது, நீதிமன்றங்களால் உடனடியாக பிணையில் விடுவிக்கப்பட்டனர். வேலைநிறுத்தம் கைவிடப்பட்டவுடன், நீதிமன்றக் காவலுக்குட்படுத்தப்பட்ட 1,656 பேரும் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டனர். பொதுவாகவே, அனுமதியின்றி சாலை மறியலில் ஈடுபட்டு போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில், யார் போராட்டத்தில் ஈடுபட்டாலும் பொதுமக்களின் நலன் கருதி, இவ்வாறான கைது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில்தான் இந்த விஷயத்திலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், 29-1-2019 அன்று அரசு ஊழியர்களும், ஆசிரியப் பெருமக்களும் தங்களுடைய போராட்டங்களை உடனடியாகக் கைவிட்டு, மக்கள் பணிக்குத் திரும்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பினர் 22-1-2019 முதல் நடத்தி வந்த தங்கள் போராட்டத்தைத் தற்காலிகமாக திரும்பப் பெற்றுக்கொள்வதாக அறிவித்து, 30-1-2019 அன்று தங்கள் பணிக்குத் திரும்பினர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுவது குறித்து அரசு ஆராய்ந்து முடிவு செய்யும். போக்குவரத்திற்கும்,

2019 பிப்ரவரி 11] [திரு. டி. ஜெயக்குமார்]

பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலை மறியலில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள்மீது பதிவு செய்யப்பட்டு, நிலுவையிலுள்ள வழக்குகளின் தன்மையைப் பொறுத்து, நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) கொடைக்கானல் நகராட்சி, மறு ஆய்வு முழுமைத் திட்டம் செயல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், சொல்லுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பழனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொடைக்கானல் நகராட்சிப் பகுதியில் இருக்கக்கூடிய கட்டடங்களுக்கு ஒரு முறை கட்டட வரன்முறையையும், புதிய முழுமைத் திட்டத்தினையும் அமல்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. குறிப்பாக, 4-3-1993 ஆம் தேதி முதல் முழுமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, அந்தத் திட்டத்தை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கால சூழ்நிலைக்கேற்றவாறு புதுப்பிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு மேலாகியும், அங்கே முழுமைத் திட்டம் நிறைவேற்றப்படாத ஒரு சூழ்நிலையில், குறிப்பாக, பல கட்டடங்கள் விதிமீறல்களுக்கு உட்பட்டிருப்பதாக இன்றைக்கு நீதிமன்றத்தால் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அங்கே வாழுகின்ற கிட்டத்தட்ட 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்ற நிலை உருவாகியிருக்கிறது. எனவே, இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுசம்பந்தமாக நான் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இன்றைக்கு நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நாளைக்கு அது என்னவென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள். (குறுக்கீடு) நாளைக்கு பார்க்கலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லா பிரச்சினைகளையும் ஒரே நேரத்தில் எழுப்ப முடியாது. உட்காருங்கள்.*